# செனட்டர் மாணிக்கம் நாளை பதவி துறப்பு

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபால் பெட்டி எண் : 49

National Tamil Daily

மலர் 9

இதழ் 162

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆடி 7 ரபி ஆகி. 14 ஞாயிற்றுக்கிழமை [23-7-67]

கொழும்பு, சனி

இம்மாதம் 24ந் திகதி செனட்சபை கூடும்பொழுது செனட்டர் எம். மாணிக்கம் தமது செனட்டர் பதவியை ராஜினமாச் செய்துவிட்டு வெளியேறுவர்.

இலங்கை-இந்தியஒப்பந்த அமுல் சட்டத்தினமீது கருத்து வேற்றுமை கொண்டு தமிழரசுக் கட்சியிலிருந்து ராஜினமாச் செய்தசெனட்டர் மாணிக்கம் தாம் தமிழரசுக்கட்சியிலிருந்து ராஜினமாச் செய்தது பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் செனட்டர் பதவியைத் துறப்பதற்கான காரணங்கள் பற்றியும் செனட் சபையில் தெரிவித்துவிட்டு வெளியேறுவார்.

## 'கிராமத்து வளர்ச்சிக்கு செலவிடுங்கள்'

கிளிநொச்சி, சனி

''ஒரு கிராமத்தின் முன்னேற்றம் அக்கிராம மக்களின் ஒத்தாசையிலும் உணர்ச்சியிலும்தான் தங்கியுள்ளது. மக்கள் தங்கள் சக்தியை ஓரளவாவது கிராமத்துக்காக செலவிடுவதன் மூலம் முன்னேற்றப் பாதையில் கிராமத்தைக் கொண்டு செல்லமுடியும்.''

இவ்வாறு கரைச்சிப் பிரிவு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. கந்தையா கிருஷ்ண பிள்ளை தட்டுவன்கொட்டி புனருத்தாரண கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

[6-ம் பக்கம் பார்க்க]

# ரூ. 100கோடி துண்டு விழும் வரவு - செலவுத் திட்டம்

## நிதி அமைச்சர் இன்று சமர்ப்பிக்கும் மதிப்பீடு

### கல்வி, காணி அமைச்சுக்கு அதிகநிதி; கைத்தொழில் அமைச்சுக்கு குறைவு

கொழும்பு, சனி

**தேசிய அரசாங்கத்தின் மூன்றுவது வரவு — செலவுத் திட்டம் நூறு கோடி ரூபாய் துண்டு விழும் திட்டமாக இருக்கும். இவ்வளவு பெரிய தொகை துண்டு விழுவது சுதந்திர இலங்கையின் சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை.**

1967-68-ம் ஆண்டுக்கான உத்தேச வரவு - செலவு மதிப்பீட்டை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஜனப்பிரதிநிதிகள் சபை கூடும்பொழுது நிதி அமைச்சர் யு. பி. வன்னிநாயக்கா சமர்ப்பிப்பார். துண்டு விழும் தொகையைச் சரிக்கட்டுவதற்கு தாம் உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் பற்றியும் எந்த எந்தப் பொருள்களுக்கு வரி விதிக்கத் தீர்மானிக்க உத்தேசித்திருக்கிறுர் என்பவையும் இம்மாதம் 25-ந் திகதி நிகழ்த்தவிருக்கும் தமது வரவு-செலவுத் திட்ட உரையில் நிதி அமைச்சர் தெரிவிப்பார்.

1967 — 68-ம் வருட உத்தேச வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி அடுத்த நிதி ஆண்டிற்கான செலவினங்களுக்கு 292 கோடியே 73 லட்சத்து 122 ஆயிரம் ரூபாயும் அடுத்த நிதி ஆண்டில் 193 கோடியே 19 லட்சத்து 17 ஆயிரத் 606 ரூபாய் வருமானம் கிடைக்கு

[6-ம் பக்கம் பார்க்க]

## "திருச்செல்வம் எங்களுக்கு வேண்டாம்"

### சுதந்திரகட்சிஊர்வலத்தில்கோஷம

### அரசாங்கத்தை வீழ்த்த சிறிமா அழைப்பு

காலி, சனி

'இந்த நாட்டில் அமைந்துள்ள மிக மோசமான, ஜனநாயகத்துக்கு விரோதமான, நீதியற்ற தேசிய அரசாங்கம் என்று சொல்லப்படுகின்ற இன்றைய அரசாங்கத்தை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றுவதற்கு முன்வருவாறு இந்நாட்டுப் பொது மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயகா, சுதந்திரக் கட்சியின் பதினைந்தாவது ஆண்டு மகாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக காலி நகர மண்டப மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

கூட்டத்துக்கு முன் காலிநகரின் முக்கிய வீதிகள் வழியாக பெரும் ஊர்வலம் ஒன்று கூட்டமைதானத்தை வந்தடைந்தது.

#### திருச்செல்வம வேண்டாம

இந்த ஊர்வலத்தில் காலி எம். பி. யும் உள்நாட்டு மந்திரியுமான திரு டபிள்யு. தகநாயகாவை கண்டிக்கும் சுலோகங்களும், பிரதம மந்திரியைக் கண்டிக்கும் சுலோகங்களும் கோஷிக்கப்பட்டன. 'திருச்செல்வம் போகட்டும்'. எங்களுக்கு திருச்செல்வம் வேண்டாம்' என்

[6-ம் பக்கம் பார்க்க]

## புகையிலை உற்பத்தி வரி நீக்கப்படும்?

கொழும்பு, ஞாயிறு

பத்தாயிரம் சுருட்டுத் தொழிலாளர்களையும், நாற்பதாயிரம் புகையிலைத் தோட்டச் செய்கையாளர்களையும் பாதித்துவரும் புகையிலை உற்பத்திவரி, உத்தேச வரவுசெலவுத் திட்டத்தில் நீக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நிதி அமைச்சர் திரு. வன்னிநாயக்காவை, இலங்கை சுருட்டுத் தொழிலாளர் பேட்டிகண்டபோது, உற்பத்திவரியை நீக்குவதற்கு, நிதிக்கமிட்டியில் ஆலோசனை செய்து நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்திருந்தார்.

உற்பத்திவரி, தமிழ் தொழிலாளர்களை மட்டுமன்றி, புகையிலைத் தோட்டம் செய்யும் சிங்கள விவசாயிகளையும் பாதிப்பதால், நிதி அமைச்சர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என தான் நம்புவதாக, இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்க செயலாளர் தெரிவித்தார்.

[அ. நி.]

தர்மராசா மரணம்:

## இரு சந்தேகநபர்களும் தலா ரூ. 5000 பிணையில் விடுதலை

காங்கேசன்துறை, சனி

தர்மராசா மரணம் சம்பந்தமாக பொலிசாரால் கைது செய்யப்பட்டு, ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களான சிவபாதத்தையும், சிவஞானத்தையும் தலா 5000 ரூபா பிணையில் செல்ல மல்லாகம் மாஜிஸ்திரேட் அனுமதித்தார்.

இவ்விஷயம் சம்பந்தப்பட்ட சாட்சிகள் எவரையும், பயமுறுத்தக் கூடாதென்றும், பொலிஸ் விசாரணைக்கு பங்கம் விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டால், பிணைப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கப்படுவார்களென்றும் மாஜிஸ்திரேட் எச்சரித்தார்.

தர்மராஜா மரணம் சம்பந்தமாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களான சிவபாதத்தையும், சிவஞானத்தையும் மீண்டும் மூன்றுவது தடவையாக மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நெத்சிங்கா முன்னிலையில் பொலிசார் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் சந்தேகநபர்கள் தொடர்ந்து 14 நாட்கள் றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறுர்களென்றும், குற்றச்சாட்டு இதுவரை தாக்கல்செய்யப்படவில்லையென்றும் மாஜிஸ்திரேட்டிடம் தெரிவித்தார்.

சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. டயஸ், இரண்டாவது சந்தேக நபரான சிவஞானத்தை பிணையில் விடுவதைத் தான் ஆட்சேபிக்கவில்லை என்றும் பூரண விசாரணைநடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து மாஜிஸ்திரேட் இதுவரையும் எதுவித குற்றச்சாட்டுகளும் தாக்கல்செய்யப்படாததால் இருவரையும் தலா 5,000 ரூபா பிணையில் விடுவதாகத் தெரிவித்தார்.

## சீனுவிடம பிரிட்டன் ஆட்சேபம

லண்டன், ஜுலை22

பீகிங்கிலுள்ள ரொயிட்டர் செய்தித் தாபனத்தின் நிருபர் ஒருவரைச் சீன அரசாங்கம் வீட்டுக் காவலில் வைத்துள்ளதை பிரிட்டன் கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

லண்டனிலுள்ள சீனத் தூதரகப் பொறுப்பதிகாரியிடம் பிரிட்டன் விடுத்துள்ள குறிப்பில் அந் நிருபரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

நம்மைச் சுற்றிலும், நமக்குள்ளேயும் உள்ள ஒவ்வொரு அணுவிலும் கடவுள் இருக்கிறார்.. ஆனால் தாம்விரும்புகிறவர்களுக்குத்தான் அவர் பிரத்தியட்சமாகிறார். இந்த உரிமையை அவர் தம்முடைய உரிமையாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஷூ
ஆடி 7உ (23-7-67)


## பிரதமரின் பாராட்டு

சின்ன வெங்காயம், மிளகாய் போன்ற உப உணவு உற்பத்தியில் நாட்டின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடிய வகையில் வடக்குகிழக்கு மாகாணங்கள் அவற்றின் உற்பத்தியை அதிகரித்திருப்பதையும் இதில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த எம்.பிக்கள் தமக்குக்கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறார்களென்றும்பிரதமர் திரு. டட்லிசேனநாயகா சிம்மாசனப பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது நடைபெற்ற விவாதத்தை முடித்துவைத்துப்பேசுகையில் பாராட்டியிருந்தார் இது வெறும் புகழ்ச்சியாக இருக்கமுடியாது. வடக்கு கிழக்கு மாகாணமக்களின் உழைப்பும் முயற்சியும் மட்டுமல்ல அவர்களுடைய ஒத்துழைப்பும், நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நாட்டை முன்னேற்றவும் அவசியம் என்பதைப் பிரதமர் உணர்ந்து கொண்டு அவர் உள்ளத்திலிருந்து வந்த பாராட்டாகவே இதைக் கொள்ளலாம்.

சின்ன வெங்காயத்திலும் மிளகாயிலும் மட்டுமல்லாது நமது தேவைக்கேற்ப உப உணவுப் பொருள்கள் அனைத்தையுமே உற்பத்தி செய்யக்கூடிய உழைப்புச் சக்தியும் ஆர்வமும் வடக்கு, கிழக்கு மாகாண மக்களிடம் இருக்கிறது. அவர்களும்இந்த நாட்டு மக்கள்; அவர்களுக்கும்இதர மக்களைப் போல் இந்நாட்டில் சுதந்திரமாக வாழ உரிமை இருக்கிறதென்பதை பெரும்பான்மை மக்களும் அவர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களும் உணர்ந்து, மதித்து நடந்தால் நாடு விரைவான முன்னேற்றத்தை அடையும். முன்னைய அரசாங்கங்கள் வகுப்புவாதக்கண் கொண்டு, ஒருவித 'இன ஒதுக்கல்' கொள்கையைக் கடைப்பிடித்து வந்ததும், வடக்கு கிழக்கு மாகாண மக்களின் விவசாய, கைத்தொழில், கடற்றொழில் முயற்சிகளுக்குப் போதிய உதவியும்ஊக்கமும் அளிக்கத் தவறியதும், வடக்கு கிழக்கு மாகாண மக்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்ததும் தான் நாடு பலதுறைகளிலும் பின்தங்கியதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

இப்போதும் கூட இந்த நிலை இன்னும் சரியான முறையில் மாற்றம்பெறவில்லை. மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டத்தை விரைவாக அமுல் நடத்தியும், வடக்கு கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளை மதித்து அவர்களின் ஒத்துழைப்பையும் பெறவும், அவர்களின் விவசாய, கைத்தொழில் முயற்சிகளுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கவும் அரசாங்கம், [அதுஎந்த அரசாங்கமாக இருந்தாலும்] முன்வந்தாலும் நாடு சுபீட்சப்பாதையில் துரித நடைபோடும் என்று துணிந்து கூறலாம்.

# உலக சமாதானத்துக்கு போலந்தின் பணி

— ஹலினு புரட்ஸ்ஹா —

நேற்று போலந்து நாட்டின் தேசிய தினமாகும். அதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

நாடுகளுக்கிடையில் பிரதிநிதிகளால் மேற் கொள்ளப்படும் உத்தியோக பூர்வமான விஜயம் சம்பிரதாய முறைப்படி ஏற்படுத்தப்பட்ட நியதி.இந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பரிமாறல்களைக் கொண்டு ஒரு நாட்டின் வெளி நாட்டுக் கொள்கையை பிரத்தியேகமாக மதிப்பிட முடியாது. போலந்து தூதரகம்இவ்வாண்டில் ஆரம்பித்த இருவித தொடர்புகள் மூலம் போலந்து நாட்டின் வெளி நாட்டுக் கொள்கையை எடுத்துக் காட்டியுள்ளது. மேலும இதன் காரணமாக பல விதமான அரசியல்சமூக முறைகளை மேற்கொள்ளும் நாடுகளிடையே சமாதானக் கொள்கையை செயற்படுத்த முடிந்துள்ளது.

புத்தாண்டு விழாவையொட்டி பத்திரிகையொன்றிற்கு விடுத்த செய்தியில் போலந்து வெளிநாட்டு மந்திரி திரு.ராபாக்கி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: எங்களுடைய பரஸ்பர நோக்கங்களின் மூலமும் செயல்களினுலும் பல நாடுகளிலும் சமாதானம் நிலவும் நன்மை ஏற்படவும் உலக சமாதானத்தை ஊக்குவிக்கவும் வழிவகை செய்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளிடையே ஏற்படும் தொடர்புகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு பாலமாகும். தற்பொழுது உலகவானில் பிரச்னைக்குரியதான விஷயங்கள், வியட்னும் யுத்தமும் ஐரோப்பிய பாதுகாப்புமேயாகும். இதனையே போலந்து வெளி நாட்டு மந்திரி குறிப்பிட்டார்.

### ஒற்றுமைப் பணி

ஐரோப்பாவின் பாதுகாப்பிற்காகவும் ஒற்றுமைக்காகவும் போலந்து பல ஆண்டுகளாகப் பலவித முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. இப்படியான நடவடிக்கைகளில் ஏன் போலந்து தேசம் அக்கறைகாட்டிவருகின்றதென்பதனைவிளக்கத்தேவையில்லை உலகத்தில்இன்று ஒரு சம்பவமோ அல்லது அரசியல் நிகழ்ச்சியோ எங்கள் எல்லோரையும் பாதிக்காது நிகழக் கூடியதாக இல்லை.

இதன் காரணமாக போலந்து தேசத்தினர் சில முயற்சிகளையும் திட்டங்களையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். போலந்து தேசம் 10 ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய ஐரோப்பா அணு ஆயுத விலக்கு பிராந்தியமாக்கப்படல் வேண்டுமென்ற ஒரு பிரேரணையை சமர்ப்பித்திருந்தது. இன்றும் சர்வதேச உலக அரங்கில் இது சம்பந்தமாக பிரஸ்தாபிக்கப் படுகின்றது. ஐரோப்பாவில் கெடுபிடி தளர்த்தப்பட வேண்டுமானல் ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். போருக்கான முஸ்தீபுகளை நிறுத்தினுல் ஐரோப்பாவின் ஆபத்தைக் குறைத்துக் கொள்ளலாம். போலந்து தேசத் தலைவர்கள் வெளி நாட்டு அரசாங்கத் தலைவர்களுடன் நடாத்திய பிரதானப் பேச்சுவார்த்தைகளின்போது அணு ஆயுத தடை சம்பந்தமாக ஒரு சர்வதேச முடிவை ஏற்படுத்த வேண்டுமென கருத்து தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய தேச பாதுகாப்பை முன்னிட்டு ஒரு மகாநாட்டை கூட்ட வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் போலந்து வெளிநாட்டு மந்திரி ஒரு பிரேரணையை கொண்டுவந்துள்ளார். இப்பிரேரணையை மற்றைய நாடுகள் ஆதரவுடன் வரவேற்றுள்ளன.

செயலினுல்தான் முன்னேற்றமடையலாம் என்ற கொள்கைக்கமைய போலந்து தேசம் ஐரோப்பிய பாதுகாப்பு சம்பந்தமான முன்னேற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

உலக சமாதானத்தை நிலைநாட்டவும் உலக நெருக்கடியை தளர்த்தவும் போலந்து மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுக்கும்.

# இயற்கை வனப்பு நிறைந்த நாடு

போலந்து தேசத்தில் மூன்று பெரிய துறைமுகங்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு இயற்கைத் துறைமுகங்கள் மற்றது செயற்கைத் துறைமுகம் அளவைப் பொறுத்தளவில் சிறியனவாக இருந்தபோதிலும் செயற்கைத் துறைமுகமான டைநியாதான்மற்றையவற்றிலும் பார்க்க நவீன அமைப்புக்கொண்டது. இங்குள்ள துறைமுகங்கள் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளன.

### துறைமுகங்கள்

இயற்கைத் துறைமுகமான செசின், டான்ஸ் ஆகியவற்றின் ஊடாக சாமான் கப்பல்களும், செயற்கைத் துறைமுகமான டைநியாவின் ஊடாக பிரயாணக் கப்பல்களும் செல்லும். இவற்றைவிட பல மீன் பிடித் துறைமுகங்களும் உள. போக்குவரத்துக்குப் பிரதான துறைமுகமாக செசின் துறைமுகம். விளங்குகிறது.

### மாதர் இயக்கம

பல்வேறு துறைகளிலும் முன்னேறிவரும் பல லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட மாதர் இயக்கம்இங்கு இயங்கிவருகிறது

இந்த இயக்கம் உலக ஜனநாயக மாதர் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்றது. மாதர் இயக்கத்தின் கூட்டுறவு இலாகா சர்வதேச மாதர் கூட்டுறவு சமாஜத்தில் அங்கம் வகிக்கின்றது. மாதர் இயக்கக் கமிட்டியிலுள்ள ஒரு பகுதி வழக்கறிஞர்களான மாதர்கள் பாரிஸில் தலைமைக் காரியாலயத்தை வைத்திருக்கும் சர்வதேச மாதர் சட்ட வல்லுணர் சம்மேளனத்தில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

### பண்ணைகள்

போலந்தில் கூட்டுறவுப் பண்ணைகளும், அரசாங்கப் பண்ணைகளும் உள்ளன. யுத்தத்திற்கு முன்பு சிறிய அளவான பண்ணைகள் அதிகமாகக் காணப்பட்டன. தற்பொழுது கிராம மக்களில் அதிகமானேர் பெரிய அளவில் பண்ணைகள் உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றனர். தனிப்பட்ட விவசாயிகள், மேம்பட்ட பண்ணைகளை வைத்திருக்கின்றனர். 1945-ம் ஆண்டு நடந்த விவசாய சீர்திருத்தி [illegible]பில் முன்னேற்றம் காணப்பட்டன.

தற்பொழுது, கிராமத்தில் வாழும் எல்லா மக்களும் தங்கள் வாழ்க்கைக்கு பண்ணை வருமானத்தை நம்பியிருக்கவில்லை. விவசாயத்தை தவிர்ந்த வேறுதுறைகளினுல், வாழ்க்கை நடத்தும் கிராம மக்களின் தொகை படிப்படியாக அதிகரித்துவருகிறது.

### மாணவர் இயக்கம

போலந்திலுள்ள பாடசாலை மாணவர்களைக் கொண்ட இயக்கமான வழிகாண்போர் சங்கத்தில், தற்பொழுது 1,700,000 அங்கத்தவர்கள் இருக்கின்றனர். இந்த இயக்கம் 11 முதல் 14 வயதுவரை உள்ளமாணவர்களின் இயக்கமாக விளங்குகிறது. இவ்வியக்கம் மிகவும் துரிதமாக வளர்ந்து வருகிறது. மாணவர் இயக்கம், பல்வேறு துறைகளிலும், படிப்படியாக முன்னேறிவருகிறது 1964-ம் ஆண்டு இறுதியில் தொழிற்சாலைகளிலும், விவசாயப்பயிற்சி பாடசாலைகளிலும் மாணவர் இயக்கம் பரவியது. சுற்றுடலில் இயக்கத்தின் நடைமுறைகளை வளர்ச்சியடையச் செய்வதுதான் வழிகாண்போர் சங்கத்தின் தற்போதைய நடவடிக்கையாக அமைந்துள்ளது. அத்துடன் இந்த நடைமுறைகளை கல்வி சம்பந்தப்பட்ட தொழிலுடன் இணைப்பதிலும் அக்கறை காட்டிவருகிறது.

[அ. நி.]

நக்ஸல்பாரியில்


## பிரதான மறைவிடம் முற்றுகை

கல்கத்தா, ஜூலை 22

நக்ஸல்பாரிக்கருகே யுள்ள தீவிரவாதிகளின் ஒரு பிரதான மறைவிடத்தை மேற்கு வங்காளப் பொலிசார் நேற்று முற்றுகையிட்டனர். ஒருவரும் கைது செய்யப்படவில்லை.

மற்றுமொரு மறைவிடத்தைப் பொலிசார் சுற்றிவளைத்தபோது, 6 பேரைக் கைது செய்தனர்.

நேபாள எல்லையில் பொலிஸ் ரோந்துகளை அதிகரிப்பதென்றும், பாகிஸ்தான் எல்லையில் மேலதிகமான பாதுகாப்பு நிலையங்களை நிறுவுவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



## சித்த ஆயுர் வேத வைத்தியர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இவ்வாண்டு இலங்கை அரசாங்க வைத்தியக்குழுவினுல் நடாத்தப்பட்ட ஆயுர்வேதப் பரீட்சையில் டாக்டர் திருமதி க. அன்னபூரணம் சித்தி பெற்று 26.6.67ல் பதிவுசெய்யப்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## உணவு மந்திரி விஜயம

அனுராதபுரம், சனி

விவசாய உணவு மந்திரி திரு.எம்.டி.பண்டா இம்மாதம் 26-ம்திகதிஅனுராதபுரத்திற்கு விஜயம் செய்கின்றார்.

புனித சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் இராசரட்டை கமத்தொழில் கண்காட்சியின் இறுதி நாளில் உணவு மந்திரி கலந்து கொள்வார்

## "நாகரீகம் கண்களை மறைக்கிறது"

உடுவில், சனி

"சமயம் என்றவுடன் கடவுள் இருக்கிறாரா என்று கேட்கும் இளைஞர்கள் தான் இன்று ஏராளம். சமய வாழ்வு எமக்கு இன்றியமையாதது. சிற்றின்பங்களில் மயங்கிய இளைஞர் நாகரீகம் என்ற போர்வையின் கீழ் மறைந்து-மதத்தை மறந்து சைவத்தை இழந்து போவதால் தான் நமது சமுதாயம் முன்னேற முடியாதிருக்கிறது.இளைஞர்கள் இதனை உணர்ந்து சமயப்பணியில் ஈடுபட்டு தமக்கும் தமிழினத்துக்கும் புனர்வாழ்வளிக்கமுன்வர வேண்டும், என்றுஇருங்நடைபெற்றஇந்துவாலிபர்சங்கக்கூட்டமொன்றில்'சமயமும்நாமும்' என்லபொருள் பற்றி பேசியஆசிரியர்திரு.கே.கந்தசாமிகூறினர்.

## இன்றைய பலன்

23-7-67
ஞாயிற்றுக்கிழமை
[ஆடிமாதம்7-ம திகதி]

நட்சத்திரம்-திருவோணம் [காலை 7-18 வரை]
மேல் அவிட்டம்.
திதி-துதியை இரவு 8-47 வரை.
சுபநேரம் 9-01--10-31
மேல் திருதியை
ராகுகாலம் 4-31-6-01

மேஷம்-உறவில்வெற்றி
ரிஷபம்-வாகன நஷ்டம்
மிதுனம்-நற்பெயர் கேட்டல்
கடகம்-பகையால் பங்கம்
சிம்மம்-வாழ்க்கைநலன்
கன்னி-கடன்படநேரும்
துலாம்-தெய்வ அருள்
விருச்சிகம்-மனத் தளர்ச்சி
தனுசு-வரவில் தாமதம்
மகரம்-எண்ணத்தில் எழுச்சி
கும்பம்-ஊண் வெறுப்பு
மீனம்-இல்லத்தில் இன்பம்

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் கொங்கோ பிரதமர் ஷோம்பேயை கின்ஷாஷாவுக்கு அனுப்புமாறு தீர்ப்பு

## அல்ஜீரியசுப்ரீம்கோர்ட் அளித்தது

### சொந்த நாட்டில் மரணதண்டனை அவரைக் காத்துக் கொண்டிருக்கிறது

அல்ஜியர்ஸ், ஜூலை 22

**முன்னாள் கொங்கோப் பிரதமர் திரு. மொய்ஷி ஷோம்பேயைக்கொங்கோவிலுள்ள கின்ஷாஷாவிடம் ஒப்படைக்குமாறு அல்ஜீரிய சுப்ரீம் கோர்ட் நேற்று இங்கு தீர்ப்பளித்தது.**

ஷோம்பே விமானமூலமாகச் செல்லுகையில் ஒரு பிரயாணியின் ரிவோல்வர்முனையில், அல்ஜீரியாவுக்கு அண்மையில் கடத்திச் செல்லப்பட்டார்.

இவர் நாட்டிலில்லாத சமயத்தில், தேசத்துரோகக் குற்றத்துக்காக இவரைவிசாரித்த இராணுவ நீதிமன்றம் இவருக்கு ஏற்கனவேமரண தண்டனை விதித்துள்ளது.

**காத்திருக்கிறது**

கின்ஷாஷாஎன்னும்இடத்தில் தான் அவருக்கு மரண தண்டனை காத்துக்கொண்டிருக்கிறது. அங்குதான் இப்போது அல்ஜீரியா சுப்ரீம் கோர்ட் அவரை அனுப்பும்படி தீர்ப்பளித்துள்ளது.

தமது 25நிமிட தொகுப்புரையில், ஷோம்பேயின் வழக்கறிஞரின் வாதங்கள்யாவற்றையும், ஒவ்வொன்ருகச்சுப்ரீம் கோர்ட் நீதிபதி நிராகரித்தார்.

**மூடிமறைக்க முடியாது**

ஷோம்பே செய்த பொதுவான குற்றங்களுக்காகவே அவர் கின்ஷாஷாவுக்கு அனுப்பப்படுவதாகவும், அல்ஜீரிய நீதிமன்றம் கொலையையும் கொள்ளையையும் மூடிமறைக்க முடியாதென்றும் நீதிபதி குறிப்பிட்டார்.

**ஷோம்பே பேச்சு**

தீர்ப்பளிக்கப்பட்டபின் பேசுகையில், முன்னாள் கொங்கோ பிரதமரான ஷோம்பே, தாம் அமெரிக்க உளவு ஸ்தாபனமான சி. ஐ. ஏ.யின் ஒரு சதித்திட்டத்துக்குப் பலியாகியிருப்பதாகக் கூறினர்.

தம்மைக் கொங்கோவுக்கு நாடு கடத்த அல்ஜீரிய நீதிமன்றத்துக்கு உரிமை இல்லையெனத்தாம் கருதினலும், அந்நீதிமன்றத்தின் தீர்ப்பைத்தாம் ஏற்றுக்கொள்வதாகவும் ஷோம்பே மேலும் குறிப்பிட்டார்.

**குறிப்பிடத்தக்கது**

கொங்கோவின் சுதந்திரத்துக்காகப் போராடிய தலைவரும், அதன்முதலாவது பிரதமருமான பட்ரீஸ் லுமும்பாவின் கொலையில் ஷோம்பேயும் சம்பந்தப்பட்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**அடுத்த நடவடிக்கை**

அல்ஜீரிய சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு, அல்ஜீரியாவின் ஜனதிபதியினல் அங்கீகரிக்கப்படவேண்டியது அடுத்த நடவடிக்கையாகும்.

**அமெரிக்கா மறுப்பு**

அமெரிக்க சி.ஐ.ஏ. பற்றி ஷோம்பே கூறியிருக்கும்குற்றச்சாட்டை வாஷிங்டனில் ஒரு அரசாங்க உத்தியோகத்தர் மறுத்தார்.

## அரசாங்கத்துக்கு அதிக லாபம

கல்கத்தா, ஜூலை 22

கல்கத்தா டிராம்வேயை மேற்கு வங்காள அரசாங்கம் மூன்று வருட காலத்துக்குப் பொறுப்பேற்றுள்ளது வாசகர்களுக்குத் தெரிந்ததே.

கடந்த புதன்கிழமை தொடக்கம், அரசாங்கம் டிராம்வேயை இயக்க ஆரம்பித்தது. அன்று தொடக்கம் நாளுக்கு ரூ, 5000 அதிகமாகக் கட்டண வசூல் கிடைத்து வருவதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் அறிவித்துள்ளார்.

## வெங்காயச் செய்கை பாதிப்பு

புன்னலைக்கட்டுவன், சனி

நேற்று முன்தினம் பெய்த பெருமழை காரணமாக இப்பகுதியிலும், ஊரெழுப் பகுதியிலுமுள்ள கமக்காரரின் வெங்காயம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஒரளவு மக்களுக்கு நிவாரணமளிக்கும் முறையில் ஊரெழு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கமக்காரரிடமிருந்து வெங்காயத்தை விலைகொடுத்து வாங்க முன்வந்துள்ளது.

## பிரியோனியில்சாக்ளா டிட்டோவைசந்தித்தார்

பெல்கிரேட், ஜூலை 22

இந்திய வெளியுறவுமந்திரி திரு. சாக்ளா, பிரியோனியில் நேற்று யூகோஸ்லேவிய ஜனதிபதி டிட்டோவுடன் மேற்கு ஆசிய நிலைமை பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் சொந்தச் செய்தி ஒன்றையும் அவர் ஜனபதி டிட்டோவிடம் கையளித்தார்.

டிட்டோ — சாக்ளா பேச்சுவார்த்தைகளில் இந்தியாவுக்கும் யூகோஸ்லேவியாவுக்குமிடையேயான நட்புறவு, மண்டலசார்பற்றகொள்கை ஆகியனவும் இடம்பெற்றன பேச்சுவார்த்தைகள் சிநேகபூர்வமான சூழ்நிலையில் நடந்தன.

இப்பேச்சுவார்த்தைகளில் யூகோஸ்லேவிய வெளியுறவு மந்திரியும், மற்றும் சில உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

**முக்கியத்துவம**

திரு. சாக்ளாவின் பெல்கிரேட் விஜயத்துக்கும்அவர் டிட்டோவுடன் பிரியோனியில் நடாத்திய பேச்சுவார்த்தைகளுக்கும் யூகோஸ்லேவிய பத்திரிகை, டெலிவிஷன் ரேடியோ ஆகியன முக்கியத்துவம் அளித்தன,

திரு. சாக்ளாவின் விஜயம், மேற்கு ஆசியப் பிரச்னையைத் தீர்க்க, மண்டல சார்பற்ற நாடுகள் புதிய முயற்சி மேற்கொள்ள வழிவகுக்கலாமென பெல்கிரேட் ரேடியோ நம்பிக்கை தெரிவித்தது.

## சிவசேன இயக்கம் பம்பாயில் ஊர்வலம்

### 'ராஜ்ய மக்களுக்கே அதிக உத்தியோகம்'

பம்பாய், ஜூலை 22

நேற்று பம்பாயில் சிவசேனவின் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

சிவசேன என்பது பம்பாயில் உள்ள வட இந்திய வகுப்புவாத இயக்கமொன்ருகும். இந்த இயக்கம் தான் தமது தோல்விக்கு முக்குய காரணமென வட பம்பாயில் கடந்த இந்தியப் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட திரு. வி கே. கிருஷ்ண மேனன் கூறியிருந்தது வாசகர்ளுக்கு நினைவிருக்கலாம்.

**மகஜர்**

இந்த சிவசேனவின் ஊர்வலம் பம்பாயில் சட்டசபைக் கட்டடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் வழியில் பொலிசாரால் இடைமறிக்கப்பட்டது. பின்னர் ஊர்வலத்தார் பம்பாய் முதன் மந்திரி திரு. வி. பி. நாயக்கைச் சந்தித்து அவரிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தனர்.

[5-ம்பக்கம்பார்க்க]

## அரபு நாடுகளுக்கு கடன் வசதி

### இறக்குமதிகளில் அளிக்க இந்தியா முடிவு

புதுடில்லி, ஜூலை 22

இந்தியாவிலிருந்து அரபு நாடுகள் இறக்குமதி செய்யும் பொருட்களை அந்நாடுகளுக்குக் கடன் வசதிகளுடன் அளிக்க இந்தியா முன்வந்துள்ளது.

இத்தகவலை இந்திய வர்த்தக மந்திரி, ஐக்கிய அரபுக் குடியரசு, சூடான், சிரியா ஆகிய நாடுகளுக்குச் செல்லும் இந்திய வர்த்தகத் தூதுகோஷ்டி ஒன்றின் மத்தியில் பேசுகையில், நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

இத்தூதுகோஷ்டியின் விஜயம் அரபு நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையே அதிக ஒத்துழைப்புக்கு வழிகோலும் வகையில் அமைய வேண்டுமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தூதுகோஷ்டியில் ஆறு அங்கத்தவர்கள் இருக்கின்றனர்.

## மத்திய பிரதேச நிலைமை பற்றி தொடர்ந்து விவாதம்

### புது டில்லியில் நடைபெறுகிறது

புது டில்லி, ஜூலை 22

மத்திய பிரதேச அரசியல் நெருக்கடி நிலைமை பற்றி நேற்று மத்திய உள்துறை விவகார கமிட்டி விவாதித்தது.

மத்தியப் பிரதேச கவர்னர் திரு. கே. ஸி. ரெட்டி, நேற்றுப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும், ராஷ்டிரபதி டாக்டர் ஷாகிர் ஹுசெயினையும் சந்தித்து, மத்திய பிரதேச நிலைமை பற்றி விளக்கினர்.

மத்திய பிரதேச காங்கிரஸ் முதல் மந்திரி, உள்துறை மந்திரி திரு. சவானைச் சந்தித்துப் பேசினர்.

**புது டில்லி வந்தனர்**

இதற்கிடையில், பிரதமருடனும் ராஷ்டிரபதியுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்த, மத்திய பிரதேச சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரசிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்த அங்கத்தவர்களும் புதுடில்லி வந்து இன்று சேர்ந்துள்ளனர்.

மத்திய பிரதேச முதல் மந்திரியின் ஆலோசனையை ஏற்று, கவர்னர் சட்டசபைத் தொடரைக்கலைத்துவிட்டுள்ளார். இது எதிர்க்கட்சியினரிடையே அதிருப்தியையும், ஆத்திரத்தையும் உண்டுபண்ணியுள்ளது.

**முதல் மந்திரி கருத்து**

காங்கிரசிலிருந்து விலகியவர்கள் ஏதோ கட்டாயத்துக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும், சிலர் மனம் மாறி மீண்டும் காங்கிரசில் சேர்ந்துள்ளதாகவும், இந்த நிலையிலேயே தாம் சட்டசபையைக்கலைக்கும்படி ஆலோசனை கூறியதாகவும் முதல் மந்திரி புது டில்லியில் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் சிறுபான்மைக் கட்சி என்பது தெளிவாகும் பட்சத்தில், தாம் ஓர் இடைக்காலத் தேர்தல் நடாத்துமாறு கவர்னருக்கு ஆலோசனை கூறுவாரெனவும் அவர் மேலும் கூறினர்.

## கேரளத்தில் மாணவர் ஆர்ப்பாட்டம

திருவனந்தபுரம், ஜூலை 22

கேரள ராஜ்யத்தின் பல பகுதிகளில் அரிசி கோரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடாத்தினர்கள். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் கற்கள் வீசியதாகத் தெரிகிறது.

## அஸ்ஸாமுக்கு தனி ராஜ்யட

### கம். கட்சி கோரிக்கை

ஷில்லொங், ஜூலை 22

அஸ்ஸாமுக்கு சமஷ்டி அடிப்படையில் அரசாங்கம் அமைத்துத்தருவதென்ற மத்திய அரசின் ஆலோசனையை அஸ்ஸாம் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு நிராகரித்துள்ளது.

அஸ்ஸாமுக்குத் தனிராஜ்...

## மேற்கு ஆசிய விவகாரத்தை விவாதித்த ஐ. நா. பொதுச்சபை

### மறுதிகதியின்றி ஒத்திவைக்கப்பட்டது

நியுயோர்க், ஜூலை 22

மேற்கு ஆசிய விவகாரத்தை விவாதித்த ஐ. நா. பொதுச்சபையின் அவசர கூட்டம் மறு திகதியின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. பொதுச்சபையின் அங்கத்துவ நாடுகளால், மேற்கு ஆசியப் பிரச்னைக்கு ஒரு சமரச தீர்வைக்காண முடியவில்லை.

**நிறைவேறியது**

மேற்கு ஆசிய விவகாரத்தை மீண்டும் ஐ. நா. பந்தோபஸ்து சபையிடம் விட்டுவிடவேண்டுமென்ற தீர்மானம், சபையில் நிறைவேறியது.

சுவீடன் பிரேரித்த இத்தீர்மானத்துக்கு 63 நாடுகள் சாதகமாகவும், 26 நாடுகள் பாதகமாகவும் வாக்களித்தன. 27 நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை.

**தீர்மானத்தை ஆதரித்தன**

ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. அரபுநாடுகள் எதிர்த்து வாக்களித்தன. பிரான்சும், இஸ்ரேலும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

**அரபுநாடுகள் அதிருப்தி**

அரபு பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புகளை வாபஸ் பெறச்செய்வதிலும் அதை ஆக்கிரமிப்பு நாடாகக் கண்டனம் செய்வதிலும் ஐ. நா. பொதுச்சபை தோல்வியடைந்ததையிட்டுப் பல அரபு நாட்டுப் பிரதிநிதிகள் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியிலுள்ள பல பாடசாலைகளை மூடிவிட கல்விஇலாகா திட்டமிடுகிறது

## 'கலந்துரையாடல்' நிகழ்ச்சியில் வட்டுக்கோட்டை எம். பி. தகவல்

சங்கானை, சனி

''முன்னாளில் மன்னர்கள் மக்களின் குறைகளை அறிய நாடு முழுவதிலும் திக் விஜயம் செய்தார்கள். மக்களும் தங்கள் குறைகளை மன்னர்களிடம் கூறி நிவர்த்திசெய்துகொண்டார்கள். இந்நாளில் இந்நாட்டு மன்னர்களை (மக்களாகிய உங்களை) இருக்குமிடம் தேடி வந்து அவர்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைகளை அறிநது நிவர்த்தி செய்யுமளவிற்கு ஜனநாயகம் வளர்ந்துள்ளது.''

இவ்வாறுசங்கானை நிகரைவைரவர் ஆலய முன்றலில் உள்ள நூலகத்தில் சங்கானை பட்டணத்தின் தேவைகளையும் குறைகளையும் நிவர்த்தி செய்ய ஒழுங்கு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்-பொதுமக்கள் ''கலந்துரையாடல்'' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம்குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடல் நிகழ்ச்சியை சங்கானை வரியிறுப்பாளர் சங்கத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர். சங்கானை பட்டினத்தின் அவசர தேவைகள் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினரிடம் ஒருமகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

### மூடிவிடத்திட்டம?

சங்கானைக்கு ஓர் உயர்தர விஞ்ஞான தொழில் நுட்பக் கல்லூரி தேவை என்ற கோரிக்கை குறித்து திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டு, இன்றைய கல்வித்திட்டத்தின்கீழ் வடபகுதியிலுள்ள பலபாடசாலைகளை மூடிவிடக் கல்வி இலாகா திட்டமிட்டுள்ளதென்றும் இதை எதிர்த்துப் போராட வேண்டிய ஓர் இக்கட்டான நிலையில் தாம் இருப்பதாகவும் இச் சந்தர்ப்பத்தில் ஒரு புதிய பாடசாலையை அமைக்கும் யோசனையை அரசாங்கம் எப்படி வரவேற்குமோதெரியவில்லை யென்றும் கூறினார்.

சங்கானைக்கு ஓர் உயர்தர பாடசாலை வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் உணர்வதாகவும், சென்றஆண்டு கல்வி இலாகாவிடமிருந்து மூவாயிரம்ரூபா பணத்தைப் பெற்று பாடசாலைக்குகட்டிடங்களைக்கட்ட உதவி செய்ததாகவும் மேலும் பாடசாலையின் நிலையை உயர்த்த முயற்சி செய்வதாகவும் சொன்னார்.

மற்றொரு கோரிக்கையான முதலாந்தரத் தபால் கந்தோர் கட்டப்படுவதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டதாகவும் விரைவில் பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகுமென்றும் எம். பி. தெரிவித்தார்.

மேலும் வாராந்தர நீதி மன்றம், இலங்கை பால் சபையின் பால் சேகரிக்கும் நிலையம், விற்பனை இலாகாவின் ஸ்தாபனம் ஆகியவை ஏற்படுத்த விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் உறுதியளித்தார்.

## 150 இரட்டைத் தட்டு பஸ்கள் விரைவில் வரும்

கொட்டாஞ்சேனை, சனி

இ. போ. ச. வெகு விரைவில் 150 இரட்டைத்தட்டு பஸ்களை இறக்குமதிசெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. சென்ற வாரம் இங்கிலாந்து சென்று இலங்கை திரும்பிய இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. ஆர். டீ. சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஒப்பந்தம் இங்கிலாந்து போக்குவரத்துச் சபையுடன் நடைபெற்றது. பஸ்கள் யாவும் வட்டியில்லாக் கடன் மூலம் பெறப்படுகின்றன.

## நேரடி தொலை பேசி சேவை

கொட்டாஞ்சேனை, சனி

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கும், கொழும்புக்கும் வெகு விரைவில் நேரடி தொலைபேசி சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. தற்போது கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இருந்து கொழும்புக்குத் தொலைபேசித் தொடர்புகொள்ள அரை மணித்தியாலத்திற்கு மேலாகின்றது.

மேலும் இந்நிலையம் அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் கட்டுநாயக்கா, உலகப் போக்குவரத்து விமானநிலையமாக்கப்படவுள்ளது.


'கஸ்தூரிமோதகய'




இழந்த வாலிபத்தைத் திரும்பத் தரும் சஞ்சீவி

இளமையிலேயே முதுமை அடைந்தது போன்ற உணர்ச்சி, வாலிபர்களுக்கும் மணமானவர்களுக்கும் ஏற்படும் பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, கனவிலும், மூத்திரத்துடனும் பலஹீனமடைதல், பயம், வெட்கம், வாழ்க்கையில் வெறுப்பு, பற்பல மூத்திராசய வியாதிகள், கை—கால் நடுக்கம், கெட்ட கனவுகள், பசியின்மை ஆகிய வியாதிகளைப் போக்கி, உடல் பலத்தையும் வீரியத்தையும், இளமை உணர்ச்சியையும் திரும்பத்தரும் சஞ்சீவி.

பத்தியம் இல்லை.

விலை ஒரு ருத்தல் ரூ. 15-00
அரை '' ரூ. 8-00
தபால் செலவு வேறு.

N. B.
இத்துடன் ''விட்டால் லேகியம்'' என்ற மருந்தையும் இரவு மட்டும் பாவித்து வந்தால் மலச்சிக்கலை அடியோடு மாற்றுவதுடன், இம் மருந்தின் பலனைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்யும்.

விலை—1/2 ருத்தல் ரூ. 4-75
1/4 ருத்தல் ரூ. 2-50

வடமாகாண ஏஜன்டுகள்:-

எஸ். சுப்பிரமணியம் & கோ,
53, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

க. செ. கைலாசபிள்ளை & சன்ஸ்,
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

ஆ. இராசையா & சன்ஸ்,
69, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:-
எஸ். என். குரு மெடிக்கல் ஹால
80, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு - 13.



# பஜே

இலங்கைக்கு நியூஸ் பிறின்ற் கடதாசி வகைகளை வழங்கிவரும் தாபனம்.

- ★ கடிதவெழுத்துப் பாய்ட்கள்
- ★ மை வகைகள்
- ★ ஊற்றுப் பேனைகள்
- ★ ஹாட் போட்டுகள்
- ★ இன்சுலேற்றிங் பைபர் போட்டுகள் (அல்பெக்ஸ்)
- ★ சிப் போட்டுகள் (அல்பெக்ஸ்)
- ★ பிளாக்ஸ் போட்டுகள் (அல்பெக்ஸ்)

(ஆகியவற்றையும் இத் தாபனம் உற்பத்தி செய்கின்றது.)

பஜே போரின் ரிறேட் என்றர்பிறைஸ்,
தபாற்பெட்டி இல. 101.,
உவார்சோ,
போலந்து.

தந்தி: HAZAPAGED WARSZAWA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

~ சினிமா விமர்சனம் ~

# கறுப்புப் பணம்

'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு' என்று 'இரத்தத்திலக'த்தில் ஒரு காட்சியில் வந்து பாடிய கவிஞர் கண்ணதாசன் 'கறுப்புப்பண'த்தில் முழுக்காட்சியிலுமே நடித்து, தனக்கும் நடிக்கத்தெரியும் என்று காட்டிவிட்டார். இனிக் கவிஞர் இளம் கதாநாயகனுகத் தோன்றி தமிழ் சினிமா உலக 'இளம்சிட்டு' களுடன் கும்மாளம் போட்டாலும் போடலாம்!

குறுக்கு வழிகளில் கொள்ளைலாபமடித்து கோடி கோடியாகப் பணத்தைச் சம்பாதித்து சர்க்காருக்குத் தெரியாமல் கறுப்புப் பணமாக முடக்கிப் பதுக்கி வைத்திருக்கும் வெள்ளை வேட்டிச் சீமான்களிடமிருந்து, பணத்தைக் கொள்ளையடித்து ஏழைகளுக்கு வாரி வாரி வழங்கும் 'வள்ளல்' ஒருவரின் கதையைப் பின்னணியாக வைத்துப் பின்னப்பட்ட கவிஞரின் கதைதான் கறுய்புப்பணம்.

கண்ணதாசன், படத்தின் கடைசிக் காட்சி வரையும் புனிதமும், தூய்மையும் மிக்க 'வள்ளல் பெருந்தகை' யாக இருக்கிருர். கடைசியில் அவர் கோலம் அம்பலமாகிறது. கொள்ளைக்காரக் கூட்டமொன்றின் தலைவர் என்ற 'விவகாரம்' அம்பலமாகின்றது. ''கோடி கோடி கோடியாகச் சம்பாதிப்பவர்களின் கறுப்புப் பணத்தைக் கொள்ளையடித்தது எனது தேவைக்கல்ல; ஏழைகளுக்கே வாரி வாரி வழங்கினேன்'' என்று நீதிமன்றத்தில் கவிஞர் வசனமும் பேசுகிருர். நல்ல மேடைப்பேச்சாளர் என்பதை உறுதிப்படுத்துகிருர்.

பாலாஜியையும், விஜயாவையும் வலிந்து 'இழுத்து' படத்துக்குள் இணைத்திருக்கிருர்கள். ஒரு காதல்காட்சி வரவேண்டும் என்பதற்காக் கவிஞர் இப்படிச் செய்திருக்கலாமா?

ஷீலா, கவர்ச்சியைக் காட்டி சொக்கவைக்கிருர்; குலதெய்வம் ராஜகோபால் பல காலத்துக்குப் பிறகு வந்து 'அட்டகாசம்' செய்கிருர்; பழம் பெரும் நடிகர்கள் பாலையாவும் சாரங்கபாணியும் வருகிருர்கள். 'ஆட வரெல்லாம்...' பாட்டு ஒன்று நினைவில் நிற்கிறது.

காமராஜரும் ஒரு காட்சியில் வருகிருர்; கவிஞரின் சொந்தப்படம் அல்லவா?

இனிப்பான பாடல்களை தமிழ் படங்கள் மூலம் தரும் கவிஞர் கண்ணதாசனைப் பார்ப்பதற்காக கறுப்புப் பணத்தைப் பார்க்கத்தான் வேண்டும்.

யாழ்ப்பாணம் 'ராஜா' தியேட்டரில் இப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது.

—'யோகி'

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-40 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 உரைச்சித்திரம், 7-45 திரைஇசை. 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 எங்கள் அதிதி.

இரவு 6-15 நாடோடிப் பாடல்கள் — பாசையூர் வளர்மதி நாடகமன்றம், 6-45 கிறிஸ்தவஆராதனை, 7-15 வேல்விழா — அஞ்சல், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம் — கடமை — வி. என். பாலசுப்பிரமணியம், 10-00 வேல்விழா—அஞ்சல்.

## 'பெற்ருேர்-ஆசிரியர்-மாணவர் சந்திபபுக்குவழி அமைக்கிறது'

### கல்லூரி விளையாட்டுப் போட்டி பற்றி வடபகுதி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், சனி

''விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் வேறு சிந்தனைகளின்றிப் போட்டியில் வெற்றியீட்டும் குறிக்கோளுடனேயே செயலாற்றுவார்கள். அதுபோலவே அவர்கள் வாழ்க்கையிலும்வெற்றி பெற, தீய செயல்களையும், தோல்வி மனப்பான்மையையும் விலக்கிவாழவேண்டும்'' என யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடபகுதி கல்வி வித்தியாதிபதி திருமதி ஆ. ஆ. நவரத்தினம் கூறினுர்.

கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் மாணவர்களையும், ஆசிரியர்களையும், பெற்ருேர்களையும் சந்திக்கவைக்கும் ஒரு விழாவாகும். இச்சந்திப்பு பாடசாலைகளின் முன்னேற்றத்துக்கும் சுபிட்சத்துக்கும் வழிகோலுவதாகும். எல்லோரும் ஒற்றுமையாக ஒத்துழைத்தால் பாடசாலைகள் முன்னேறமுடியும் என்றும் திருமதி நவரத்தினம் கூறினுர்.

ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் திரு. எம். எம். ஏ. குத்தூஸ், அரசாங்கத்தை நம்பியிராமல் கல்லூரி முன்னேற்றத்துக்குப் பெற்ருேரும் உதவவேண்டுமென்றும் தாயினத்தைச் சேர்ந்த ஒரு வித்தியாதிபதி முதன்முறையாகத் தமது கல்லூரி விளையாட்டு விழாவில் கலந்துகொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைவதாகவும் கூறினுர்.

திரு. ஜனுப் ஜமீர் நன்றி கூறினுர்.

மூன்று இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் இக்பால் இல்லம் சாம்பியனுனது. மற்றும் சாபி இல்லம் இரண்டாவதாகவும், அலி இல்லம் மூன்ருவதாகவும் வந்தன.

மேற்பிரிவில் எம். எஸ். எம். சலீம்கானும், மத்திய பிரிவில் எம். எப். எம். அஷ்ரப்பும், எம். வை. ஜாக்கூப்பும், கீழ்ப் பிரிவில் எச். ரி. தஸ்லீமும் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு வட பகுதி வித்தியாதிபதி பரிசில்களை வழங்கினுர்.

## ''நம்பண்பாடு அழிகின்றதே''

உடுவில், சனி

''வளர்ந்துவரும்இளம்சந்ததியினர் தமக்கென ஒரு பாதையை வகுத்து அதன் பண்பாட்டுக்கமைய நடப்பதாக இல்லை. மேடைப் பேச்சாளரையோ, திரைப்பட நடிகர்களையோ பின் பற்றி அவர்களைப் போலவே தாமும் நடப்பதாக எண்ணுவது தான் தவறு. இதனுல் தான் நம் பண்பாடு அழிவுறுகின்றது. கட்டுப்பாடானபண்பாட்டை இளைஞரிடம் புகுத்த பெரியோர்கள் முன்வர வேண்டும்.''

இவ்வாறு சுன்னுகம் பட்டின சபையின் ஆதரவில் சுன்னுகம் திறந்த வெளி மைதானத்தில் நடைபெற்ற கருத்தரங்கமொன்றில் ''பண்பாடும் நமது வாழ்க்கையும்'' என்னும் விஷயம் பற்றி உரை நிகழ்த்தியதிரு. மயிலை சிவசண்முக தாசன் கூறினுர்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. பட்டின சபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கமும் பேசினுர்.

## வரி விளம்பரம்

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, இரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணுநந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

சமையற்காரர்:

பண்டத்தரிப்பு தியாகருஜ் வீதியில் புதிதாக அமைக்கவிருக்கும் ருஜ் ஹோட்டலுக்கு [Rajh Hotel] சமையல் வேலையில் அனுபவம்நிறைந்தவர்கள் தேவை. நேரில் வரவும். தியாகருஜா.

2510

### சிவசேன . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மகஜரில் குறிப்பிட்டிருந்த கோரிக்கையில் உத்தியோகங்களில் 80 சதவிகிதத்தை ராஜ்யத்தைச் சேர்ந்த மக்களுக்கே ஒதுக்கி வைக்க வேண்டுமென்பதும் ஒன்ருகும்.

வியாபாரம பெருக
விளம்பரம்செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — காமினி [மருதானை]
ராஜ் [நீர்கொழும்பு] — வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] — ஸ்ரீ கிருஷ்ணு [திருமலை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!

புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனேரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த





ஏவி. எம். புரொடக்ஷன்ஸ

அன்பே வா

(ஈஸ்ட்மென் கலர்)

கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதன்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-45
விடுமுறைதினங்களில் 4காட்சிகள்
கண்ணதாசன்
கே. ஆர். விஜயா
நடித்த
கறுப்புப்பணம்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்
எல். விஜயலெட்சுமி
நடித்த
இருவல்லவர்கள்

மனேஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 4-45, 7-00, 9-45
MEIN KAMPF
(The war crimes of Adolf Hitler)

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m. 9-45 p. m.
Tony Randall
Barbara Eden
in
The Brass Bottle

சிறந்த ஜெம்ஸன்



உங்களுக்கும்
உங்கள்
மகனுக்கும்

X சுருங்காதது
X இறுக்கமானது
X விசேஷ உறுதியான பொக்கட்டுகள்
X அளவும் திறமையும் ஒருபோதும் மாருதது
X பிழையான வேலை இல்லை என்ற உத்தரவாதம்
X ஒவ்வொரு சிறந்த கடையிலும்கிடைக்கும்.

வியாபாரிகள்

யாழ்ப்பாணம்:
தொலாரம்ஸ், பிரதானவீதி.
தயரம்ஸ், பிரதான வீதி.
பொகுமால்ஸ், பிரதானவீதி.

பின்வரும் இடங்களில் ஏஜெண்டுகள் தேவை

X திருக்கோணமலை
X மட்டக்களப்பு
X கல்முனை
X அம்பாறை
X மன்னுர்
X காங்கேசன்துறை

வர்த்தக விசாரணைகள்:-
லக்கி பைவ் இண்டஸ்றீஸ்
பிரதான வீதி, கொழும்பு.
டெலிபோன்:- 3184

கால்சட்டை, அரைக்காற்சட்டை, சேட்டுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரள சட்டசபையில் பார்வையாளர் ஆர்ப்பாட்டம்

## எட்டு பேர் கைது

திருவனந்தபுரம், ஜூலை 21

கேரள சட்டசபையில் பார்வையாளர் கலரியில் சிலர் ஆர்ப்பாட்டங்கள் செய்ததால் சபை நடவடிக்கைகள் சுமார் 20 நிமிடங்கள் தடைபட்டன.

ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் தமது கட்சியினரும் இருந்தார்கள்என்றும் அவர்கள் மீது தமது கட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் அவ்வாறே மற்றக்கட்சிக்காரர்களும் ஆர்ப்பாட்டம் செய்த தமது கட்சியாளர்களைத் தண்டிக்க வேண்டும் என்றும் முதன் மந்திரி திரு. நம்பூதிரிபாட் கூறினர்.

ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் பின்னர் சபையில் கூறினர்.

பார்வையாளர்கள் கலரியில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் 'அரிசி, அரிசி' என்று கோஷமிட்டதாகக் கூறப்பட்டது.

# மனைவியை வெட்டியவர் தற்கொலை செய்துகொண்டார்

யாழ்ப்பாணம், சனி

மனைவியைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய ஒருவர் பின்னர்தான் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் கோண்டாவிலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மரணமான 6 பிள்ளைகளின் தந்தையான செல்லப்பா சுப்பிரமணியத்தின் [40 வயது] மரணம் சம்பந்தமாக திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

மரணமானவரின் மனைவியும் கத்திவெட்டுக் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பவருமான சுப்பிரமணியம் பொன்னம்மா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

காலஞ்சென்றவரை நான் 13 வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்துகொண்டேன். எங்களுக்கு 6 பிள்ளைகள் உண்டு. காலஞ்சென்றவர் என்னையும் பிள்ளைகளையும் கவனிக்காததால் நான் அவர் மீது யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஜீவனும்சம் கோரி வழக்குத் தாக்கல் செய்தேன். மாதாமாதம் எங்களுக்கு 82ரூபா 50 சதம் ஜீவனும்சப் பணம் மரணமானவர் செலுத்தவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது. இம்மாதம் 19-ம் திகதி இரவு 8 மணியளவில் நான் எனது வீட்டுக்கருகிலுள்ள தம்பிராசா என்பவரது வீட்டிலிருந்தேன். அப்போது மரணமானவர் என்னை வந்து தன்னுடன் வந்திருக்குமாறு அழைத்தார். நான் அதனை மறுத்தேன். உடனே அவர் கத்தியொன்றை எடுத்து எனது கழுத்திலும், காலிலும் வெட்டினர். இதனல் நான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன். அடுத்த நாள் அவர் இறந்துவிட்டதாகத் தெரிய வந்தது.

திருமதி தம்பிராசா, கந்தையா சுப்பிரமணியம், செல்லப்பாமுருகேசு, பொன்னம்மா ஆகியோரும் விசாரணை செய்யப்பட்டனர். டாக்டர் திருநாவுக்கரசு பிரேத பரிசோதனை செய்த பின்னர் தற்கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். [ந. நி.]

## ஆனையிறவு பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், சனி

அடுத்த மாதம் 1-ம் திகதி முதல் ஆனையிறவில் அமைக்கப்படவிருக்கும் பொலிஸ், ராணுவ நிரந்தர பரிசோதனை நிலையத்துக்கு குருநாகலை பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசிங்கா நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இவரின்கீழ் 13 பொலிஸ் கான்ஸ்டபிள்களும், இரு பொலிஸ் சார்ஜன்டுகளும் 10 ராணுவத்தினரும் கடமையாற்ற இம்மாத முடிவுக்குள் நியமிக்கப்படுவார்களென்றும் தெரிகின்றது. [ந. நி.]

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### ஆங்கில ஆசிரியருக்கு

## விடுமுறை கால பயிற்சி

காங்கேசன்துறை, வெள்ளி

இலங்கை முழுவதுமுள்ள முதல்தர பாடசாலைகளிலும் மத்திய மகா வித்தியாலயங்களிலும் உயர்தர வகுப்புகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களுக்கு மகாரகம ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஒரு விடுமுறை காலப்பயிற்சியை அளிப்பதற்கு கல்விஇலாகா ஏற்பாடு செய்துள்ளது. ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி தொடங்கும் இவ்விடுமுறை காலப் பயிற்சி 30-ம் திகதி வரை நடைபெறும். இதற்கான சுற்றுநிருபம் ஒன்றை கல்வி இலாகா, முதல்தர கல்லூரி அதிபர்களுக்கும் மத்தியமகாவித்தியாலய அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

### சீனவில்

## இன்னொரு தலைவருக்கு கல்தா?

ஹாங்காங், ஜூலை 21

சீனவின் பிரசாரத்துறை முதல்வராகவும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் வரிசையில் 4வதாக இருந்துவருபவருமான டாவோ சுவை சீனப்பத்திரிகைகள் மாசேதுங் எதிர்ப்பாளர் என்று தூஷித்துள்ளன. இது அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதைக் காட்டுவதாகக் கருதப்படுகின்றது.

## இந்தோனேஷியா ஒற்றர்களை அனுப்புகிறது

ஜாகர்த்தா, ஜூலை 21

இந்தோனேஷியாவில் தற்போது ஆட்சி செலுத்திவரும் அரசாங்கத்தைக் கவிழ்க்க வெளியிலுள்ள இந்தோனேஷிய கம்யூனிஸ்டுகள் சதிசெய்து வருவதாகச் சந்தேகிக்கப்படுவதால் இச்சதி வேலைகளைக் கண்டுபிடிக்க மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒற்றர்களை அனுப்பி வைக்க இந்தோனேஷிய அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## தமிழகத்துக்கு மத்திய அரசு உதவி

மதுரை, ஜூலை 21

தமிழகத்தில் சிறுபாசனத் திட்டங்களுக்கு ரூபா 3 1/2 கோடியும், கிராமப்புறங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு ரூபா 3 கோடியும் கூடுதலாகவழங்குவதுபற்றி மத்திய அரசாங்கம் பரிசீலனைசெய்துவருகிறது.

இத்தகவலை மத்திய உணவு இலாகா ஸ்டேட் மந்திரி திரு. ஷிண்டே மதுரையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் விசேஷ தேவைகள் பற்றி மத்திய அரசாங்கம் உணர்ந்திருப்பதாகவும், அவற்றைப் பூர்த்திசெய்ய அது உதவி அளிக்குமெனவும் அவர் மேலும் கூறினர்.

## கடன் தொல்லை; அதனல் தற்கொலை

யாழ்ப்பாணம், சனி

புத்தூரைச் சேர்ந்த சின்னவன் சின்னப்பொடியன் என்பவரின் மரணம் சம்பந்தமாக திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

கடன்தொல்லை தாங்காது அவர் நச்சுத்திராவகம் அருந்தியிருக்கலாம் என மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. தற்கொலைஎனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## வயோதிபர் மரணம

### பொலிசார் விசாரணை

அனுராதபுரம், சனி

அனுராதபுரத்திலுள்ள குருநாகல் றோட் சந்தியில் ஒரு வயோதிபரின் சடலம் நேற்று காணப்பட்டது, பொலிசார் நடத்திய விசாரணையில் இறந்து கிடப்பவர் 75 வயதுடைய ஆறுமுகம் வேலு என்ற தொழிலாளி எனத் தெரிய வந்தது. இறந்ததரின் நண்பர் ஒருவர் அடையாளம் காட்டினர்.

இறந்தவர் நேற்றுக்காலை உணவு அருந்திவிட்டுப் பிச்சை எடுப்பதற்காகறோட்டுக்குவந்தாரென்றும் கூறப்பட்டது. பொலிசார்மேலும் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அங்கவீனர்களின் கைத்தொழில் பொருள்கள் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவிருக்கும் கைத்தொழில் பொருட்காட்சியில் சமூக சேவைப் பிரிவில் முக்கிய இடம் வகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பண்ணை அங்கவீனர்களின் நெசவுப் பொருட்கள், பின்னல் வேலைகள், பன்னவேலைகள், பிரம்புக் கூடைகள், விளையாட்டுப் பொருட்கள் ஆகியன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. காட்சிக்கு வைக்கப்படும் இப்பொருட்கள் விற்பனை செய்யப்படும்.

## மரண அறிவித்தல்

### செல்லப்பா சபாரத்தினம்

கண்மணியின் அருமைக் கணவரும் தனலட்சுமி [ஆசிரியை சேணிய தெரு ஆங்கிலப் பாடசாலை], பாக்கியலட்சுமி பரமேஸ்வரன் [ஏ. எஸ். சங்கரப்பிள்ளை அன் பிரதர்ஸ்] ஆகியோரின் தந்தையுமானசுகாதார இலாகா வில் இளைப்பாறிய கணக்காளர் செல்லப்பா சபாரத்தினம் காலமாகிவிட்டார். அன்னரின் பூதவுடல் கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக 23-7-67 காலை 8 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 2436

# கிராமசபைக்குள்ள அதிகாரம்கூட இல்லை

## மாவட்டசபை பற்றி கொழும்பு கிளை கண்டனம்

கொழும்பு, சனி

தமிழ்காங்கிரஸ் கட்சியின் கொழும்புக்கிளையின் காரியக்கமிட்டி. வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அதன் உத்தரவுகளுக்கமைய மாவட்டசபைகள் ஏற்படுத்தப்படுவதை திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் ஏற்றுக்கொண்டு விட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

மாவட்டசபைகள் தனிப்பட்டு இயங்குவதென்றும், தமிழ்ப்பகுதிகளில் அதன்நிர்வாகம் தமிழிலேயே இருக்குமென்றும் குடியேற்றத் திட்டங்களும் அதன் பொறுப்பிலேயே இருக்குமென்றும் முன்னர் திரு. செல்வநாயகம் கூறியிருந்தாகவும் ஆனல் மிகக்குறைந்தஅதிகாரங்களுடன் அவை அமைக்கப்படுவதை அவர் ஏற்றுக்கொண்டு விட்டதாகவும் அக்கமிட்டி கூறுகின்றது.

மாவட்டசபைகள் கிராமசபைகளுக்குரிய அதிகாரங்களைவிட குறைந்த அதிகாரங்களையே கொண்டிருக்குமென்றும் உதவித் தொழில் மந்திரி திருஎஸ்.டி. ஜயசிங்க பிரதிநிதிகள்சபையில்கூறியுள்ளதைகமிட்டி குதன்றிபில் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

# 'அந்நிய கூலிப் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்'

## ஐ. நா. சபையிடம் கொங்கோ கோரிக்கை

பிரசவில், ஜூலை 22

அந்நிய நாடுகளில் பதுங்கியிருக்கும் கூலிப்பட்டாளத்தினரைக் கொங்கோவுக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு கொங்கோ அரசாங்கம் ஐ. நா. சபையைக் கேட்டுள்ளது.

கொங்கோ அரசாங்கத்துக்கெதிராக போர் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அந்நிய கூலிப்பட்டாளத்தினர், அங்கோலாவிலும் ரொடீஷியாவிலும் மறைந்திருப்பதாகவும், அவர்களைக் கொங்கோவில் நீதி விசாரணை செய்ய கொங்கோவுக்கு அனுப்பி வைக்குமாறும் சம்பந்தப்பட்ட அரசாங்கங்களைக் கேட்டுக்கொள்ளும்படியும் கொங்கோ ஐ. நா. சபையைக் கேட்டுக்கொண்டுள்ளது.

### கொங்கோ கேள்வி

அந்நிய கூலிப்பட்டாளத்தினரை எந்த நாடும் தனது பிரதேசத்தில் வைத்திருக்கக்கூடாது என்று ஐ. நா. சபை ஏற்றுக்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம், போர்ச்சுக்கல், ரொடீஷியா ஆகிய நாடுகளுக்கெதிராக ஐ. நா. சபை என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறதென்றும் கொங்கோ, சபையிடம் கேட்டிருக்கிறது.

### 'கிராமத்து வளர்ச்சிக்கு...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-மு.கந்தையா உபதலைவர்-வி. வேலாயுதம் பிள்ளை, செயலாளர்- கோ. முத்துக்குமாரு. உபசெயலாளர் நா.சிவசம்பு, பொருளாளர்-த. பொன்னம்பலம். நால்வர் கொண்ட நிர்வாக சபையும் தொண்டர் படையும் தெரிவு செய்யப்பட்டது

## ரூ. 100 கோடி ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மென எதிர்பார்க்கப்படுகிறது. இதனல் புதிய வரவு - செலவுத் திட்டத்தில் 99 கோடியே 53 லட்சத்து 94 ஆயிரத்து 594 ரூபாய் துண்டு விழுகிறது.

சென்ற நிதி ஆண்டில் நிதி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட தொகை446,806,678 ரூபாய். இவ்வாண்டு நிதி அமைச்சுக்கு 528,775,335 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இராணுவச் செலவு இம்முறை அதிகரிக்கப்பட்டுள்ளது. காணிஅபிவிருத்தி அமைச்சின் செலவினமும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருடத்தில் காணி அமைச்சுக்கு 330,183,247 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இம்முறை 353,256,897 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் கடற்றொழில் அமைச்சின் செலவினம் சென்ற ஆண்டைவிட இம்முறை பத்து லட்சம் ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் செலவினம் இம்முறை அதிகரிக்கப்பட்டுள்ளது.

## "திருச்செல்வம ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் சுலோகங்களும், 'டெடிகம தமிழா வந்து பதில் சொல்' என்ற சுலோகங்களும் ஊர்வலத்தில் கோஷிக்கப்பட்டன.

திருமதி சிறிமா பண்டாரநாயகா மேலும் பேசுகையில், ஜனநாயக விரோதமான இன்றைய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் தங்கள் மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறதென்றும் மக்கள் அளித்த ஆதரவு தமக்கு உற்சாகமளித்திருக்கிறதென்றும் கூறினர். பொய்யான வாக்குறுதிகளை அளித்தே இன்றைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது என்று கூறிய திருமதி பண்டாரநாயகா, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறதென்றும் பொருளாதாரப் பிரச்னை தீர்க்கப்படவில்லையென்றும் புதிய தொழிற்சாலை ஒன்றுகூட ஆரம்பிக்கப்படாமல் தாங்கள் தொடங்கியதொழிற்சாலைகளைத் திறந்துவைக்கிறார்களென்றும் கூறினர்.

மகாநாட்டுக்குஒத்துழைப்பும் உதவியும் அளித்தகாலி நகர மேயர் திரு. டபிள்யு. டி.எஸ். அபயகுணவர்த்தனவைப் பாராட்டிய திருமதி பண்டாரநாயகா திரு.அபயகுணவர்த்தனவை யு. என். பி.யிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியினருடன் சேருமாறு அழைப்புவிடுத்தார்.

திரு.ஆர்.ஜி, சேனநாயகா பேசுகையில், மாவட்டசபைகள் அமைக்குமுன் உள்ளூராட்சி மன்றங்களைச்சீரமைக்க வேண்டுமென்றும் மாவட்டசபைகள், தமிழர் தனிநாடு பிரித்து தனியாட்சி அமைக்க வழிவகுக்குமென்றும் கூறினர்.

திரு. ரி. பி. இலங்கரத்ன பதியுதீன் மாமூத் ஆகியோரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org